OS.No. : 10/2023

நாள் : 25.11.2025

பி.வா.சா. : 2

பெயர் :இளங்கோவன்

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு தாக்கல் செய்த போது 1ம் பிரதிவாதி உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். எனக்கும் 1ம் பிரதிவாதியான என் அம்மாவிற்கும் ஒரே வக்கீல் என்றால் சரிதான். வாதிகள் சொத்தில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். அவர்களுக்கு பாகம் உண்டு என்று தான் நானும் என் தாயாரும் கட்சி செய்கிறோம். என் தாயார் தற்போது உயிருடன் இல்லை. வாதிகளின் நிலைபாட்டை தான் நாங்களும் இந்த வழக்கில் எடுத்துள்ளோம் என்றால் சரிதான். என் அம்மா 2022ம் ஆண்டு இறந்துபோனார். தேதி மாதம் நினைவில்லை. என் அம்மா கையெழுத்து போடும் வழக்கம் உள்ளவர். என் தாயார் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளித்துள்ளார். கையெழுத்தும் செய்துள்ளார். உயிலில் அவ்வாறு கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல கைரேகை வைத்துள்ளார். உயில் என் அம்மா இறப்பதற்கு 25 நாட்களுக்கு முன்னர் எழுதி வைத்தார்கள். என் அம்மா இறக்கும்போது 80 வயதிற்கு மேலிருக்கும் சிறுநீரக கோளாறு காரணமாக இறந்துபோனார். உயிலில் என் அம்மா தனக்கு சொந்தமான 64 குழியை என் பெயருக்கு எழுதி வைத்துள்ளார். என் அம்மா வீட்டுக்குடித்தனம். மேற்கண்ட 64 குழி நிலத்தை என் அப்பா இறந்தபோது என் அம்மா வாங்கினார் எந்த வருடம் என்று நினைவில்லை. என் அம்மாவிற்கு தனியாக வருமானம் இல்லை என்றால் சரிதான். அந்த 64 குழி நிலம் கூட்டு குடும்ப சொத்திலிருந்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. அது என் அம்மாவின் தாய் தந்தை சொத்தை விற்று வாங்கப்பட்டதாகும். அது எந்த சொத்தை

விற்று வாங்கப்பட்டது என்று என்னாலும் என் அம்மாவாலும் கூற முடியாது என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணத்தில் தட்டச்சு செய்தவர் வரைவு செய்தவர் விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் சாட்சி கையொப்பமிட்டுள்ள மலர்விழி, பூங்கோதை இருவரும் 4, 5 வாதிகள் என்றால் சரிதான். என் அம்மா இறக்குபோது சுரைக்காவூரில் வசித்தார்கள். உயில் அங்கு தான் எழுதப்பட்டது. அது திருவாரூர் மாவட்டம் குடவாசல் தாலுக்கா. அங்கு வைத்து தான் உயிலில் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என் அம்மாவும் அங்கு வைத்துதான் கைரேகை வைத்தார். அங்கு வந்து தான் ராஜதுரை வழக்கறிஞர் கையெழுத்து போட்டார் என்றால் சரிதான். ராஜதுரை வழக்கறிஞர் நோட்டரி மயிலாடுதுறை மாவட்டத்தில் மட்டும் தான் ஆவணங்களில் கையொப்பமிட அதிகாரம் உள்ளது என்றாலும் திருவாரூர் மாவட்டத்தில் கையொப்பமிட அதிகாரமில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உயிலில் உள்ள சாட்சி கையெழுத்துகள் விருப்ப சாட்சிகள் அதனால் இந்த உயில் சந்தேகத்திற்குரியது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

OS.No. :10/2023

நாள் : 25.11.2025

பி.வா.சா. : 5

பெயர் : பூங்கோதை

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 5ம் வாதி என் சகோதரி மலர்விழி 4ம் வாதி. ஜனகம் என் அம்மா முதல் பிரதிவாதி. என் அண்ணன் இளங்கோவன் 4ம் பிரதிவாதி. வாதிகளாகிய நாங்களும் 1, 4 பிரதிவாதிகளும் ஒரே நிலைப்பாட்டை எடுக்கிறோம் என்றால் சரிதான். பிவாசாஆ 1 உயிலில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன். என் அம்மா இறக்கும் காலத்தில் என் வீட்டிலிருந்தார்கள். என் ஊர் திருவாரூர் மாவட்ட குடவாசல் தாலுக்கா, சுரைக்காவூர். அந்த உயிலில் சாட்சி கையொப்பமிட்டவர் மயிலாடுதுறை நோட்டரி பப்ளிக் ராஜதுரை. அவர் என் வீட்டிற்கு வந்து உயிலில் கையொப்பம் செய்தார். ராஜதுரை வக்கீல் வசிப்பது மயிலாடுதுறை என்றால் சரிதான் அவர் திருவாரூரில் கையெழுத்துபோட அதிகாரம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் என் தங்கையும் விருப்ப சாட்சிகளாக கையொப்பமிட்டுதால் உயில் சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல.

S. Poonsolai

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

OS.No. :10/2023

நாள் : 25.11.2025

பி.வா.சா. :4

பெயர் : மலர்விழி

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் 4ம் வாதி. பூங்கோதை 5ம் வாதி. ஜனகம் என் அம்மா வழக்கின் 1ம் பிரதிவாதி. என் அம்மா 13.04.2022 அன்று காலமானார். இறந்து போவதற்கு 20 நாட்கள் முன்னர் உயில் எழுதப்பட்டது. உயில் எழுதும்போது என் அம்மா 5ம் வாதியான என் தங்கை பூங்கோதை வீட்டிலிருந்தார். என் அம்மாவிற்கு கிட்னி பிரச்சனை எதுவும் கிடையாது நல்ல முறையில் இயற்கையாக இறந்தார். என் அம்மா இறக்கும் போது வயது தெரியவில்லை. நான் கையெழுத்து போட்ட உயில் எழுதப்பட்டது கையெழுத்து போட்டதெல்லாம் சுரைக்காவூரில்தான். என் அம்மா அங்கு தான் ரேகை வைத்தார். நானும் அங்கு தான் கையெழுத்து போட்டேன். அதில் கையொப்பம் செய்துள்ள நோட்டரி பப்ளிக் ராஜதுரை முதல் நாள் வந்து என் அம்மாவை பார்த்து சென்றார். மறுநாள் அங்கு வந்து என் தங்கை பூங்கோதை வீட்டில் கையெழுத்து செய்தார். அம்மா விருப்பப்படி அவர் தயார் செய்து எடுத்து வந்தார். சுரைக்காவூர் குடவாசல் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம் என்றால் சரிதான். ராஜதுரை வக்கீல் வசிப்பது மயிலாடுதுறை என்றால் சரிதான் அவர் திருவாரூரில் கையெழுத்துபோட அதிகாரம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நானும் என் தங்கையும் விருப்ப சாட்சிகளாக கையொப்பமிட்டுதால் உயில் சந்தேகத்திற்குரியது என்றால் சரியல்ல.

R. Malar

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

25/11/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை